மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். அத்தகையோர் 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பணி புரிந்திருந்தால் அவர்கள் 40 வயதுவரை தமிழ்நாடு தேர்வாணைக்குழுவின் மூலம் பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதல்தர தமிழ் ஆசிரியர்கள் பதவிகளுக்கும் நேரடித் தேர்வில் போட்டியிட அனுமதியளிக்கப்படுகிறார்கள்.

பி. ஓ. எல். பட்டப்படிப்பு

*268 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

B.O.L. பட்டப்படிப்பை மறுபடியும் துவக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி : புலவர் படிப்பிற்கு டிப்ளமா என்றில்லாமல் பி.ஏ., எம்.ஏ. போல பட்டப்படிப்பாக மாற்றும் திட்டம் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. பல்கலைக்கழகங்கள்தான் அதைப் பற்றி முடிவு செய்யவேண்டும். பி. ஓ. எல். பட்டத்தைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகங்களில் ஏதாவது செயற் குறிப்பு இருக்கிறதா என்று கேட்கப்பட்டு சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆழ்கடலில் மீன்பிடிப் பயிற்சி

* 273. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீனவர்களுக்கு ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான பயிற்சி அளித்திடும் நிலையங்கள் எவற்றையேனும் தமிழ்நாடு அரசு நடத்திவருகின்றதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS